1981 பிப்ரவரி 10

6. அறிவிப்பு

நீர்ப்பாசனத் துறையின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மேலவையில் இருப்பதால் நீர்ப்பாசனத் துறை குறித்த திருத்த அறிக்கை பின்னால் எடுத்துக் கொள்ளப்படும்.

7. கவன ஈர்ப்புகள்

செங்கல்பட்டு மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம்

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, விதி 54 ன் கீழ் 'செங்கற்பட்டு மாவட்டம், கரிமணல் பஞ்சாயத்தைச் சேர்ந்த திருமலைநகரில் ஏற்பட்ட மோதலில் மீன்பிடி சாதனங்களை இழந்து தவிக்கும் மீனவர்களுக்கு நிவாரண உதவி அளிக்க வேண்டிய அவசியம் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை

செங்கற்பட்டு மாவட்டம் கரிமணல் பஞ்சாயத்திலுள்ள திருமலை நகரில் அங்குள்ள மீனவர்களுக்கும் அதன் பக்கத்துக் கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கும் பழவேற்காடு ஏரியில் மீன் பிடிப்பது குறித்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் அன்று கலவரம் ஏற்பட்டது. அன்று பிற்பகல் காவல்துறையினரும் வருவாய்த் துறையினரும் அங்கு விரைந்து சென்று நிலைமையைக்கட்டுப்படுத்தினர். மறுநாளே வருவாய்த்துறை மூலம் ஊர் குடியினர் அனைவருக்கும் 10 மூட்டை அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டது, தீயினால் பாதிக்கப்பட்ட நாற்பத்தேழு குடிசைகளுக்காக ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 200 வீதம் மொத்தம் ரூபாய் 9,400 வழங்கப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS